திராவிட மாடல் விதைத்தது விளைகிறது, விளையாட்டுக் களத்திலும்



பயிற்சிக் கட்டணங்களுக்குரிய காசோலைகளையும் வழங்கிச் சிறப்பித்தார் திராவிட மாடல் நாயகர். தற்போது ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று, நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்துள்ளார் பரணிகா.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் தடை தாண்டும் (hurdles) ஓட்டத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வித்யா ராம ராஜ் 42 ஆண்டுகால தேசிய அளவிலான சாதனையை முறி யடித்து வெண்கலப் பதக்கம் வென்றிருக்கிறார். 1984ஆம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்ஜெல்ஸில் நடைப் பெற்ற ஒலிம்பிக் போட்டியில் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில், இந்தியாவின் தங்கமங்கை பி.டி.உஷா 55.42 விநாடிகளில் தூரத்தைக் கடந்தார். இதுதான் இந்திய வீராங்கனை ஒருவரின் தேசிய சாதனை. எனினும், அந்த ஒலிம்பிக்கில் அவரைவிட வேகமாக மற்ற நாட்டு வீராங்கனைகள் ஓடியதால், 0.01 நொடி வித்தியாசத்தில் நூலிழையில் வெண்கலப் பதக்கத்தைத் தவற விட்டார் பி.டி.உஷா. ஜப்பான் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டின் வித்யா ராம்ராஜ், 54.75 நொடிகளில் 400 மீட்டரை தாண்டியும் ஓடியும் கடந்து வெண்கலப் பதக்கம் வென்று பெருமைப் படைத்திருக்கிறார்.

அது மட்டுமல்ல, இந்த 2026 ஆசியப் போட்டியில் தடகளப் போட்டியில் இந்தியாவுக்கான முதல் தங்கப் பதக்கம் 4 X400 மீட்டர் மகளிர் தொடர் ஓட்டப் பந்தயத்தில் கிடைத்தது. பந்தயத்தை நிறைவு செய்யும் (Anchor Leg) ஓட்டக்காரராக இருந்த வித்யா ராமராஜ் மிக சிறப்பாக ஓடி தங்கப்பதக்கம் பெறக் காரணமானார். 4X400 (ஆண்+பெண்) கலப்பு தொடர் ஓட்டப்பந்தயத்திலும் இவர் சிறப்பாக செயல்பட்டு இந்திய அணி வெண்கப் பதக்கம் பெறத் துணை நின்றார். இந்த ஓட்டத்தில் விஷால் தென்னரசு என்ற தமிழ்நாட்டு வீரரும் இடம்பெற்றிருந்தார்.

கோவையைச் சேர்ந்த வித்யா ராமராஜ் தன்னுடைய பயிற்சிகளுக்குத் திராவிட மாடல் அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரான அப்போதைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆதரவாக இருந்ததை ஏற்கனவே ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். விளையாட்டுத் துறைக்கு உதயநிதி அவர்கள் பொறுப்பேற்ற



ஜப்பானின் நகோயாஅய்ச்சி பகுதிகளில் நடைபெற்று வரும் 20ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் சிறப்பாக விளையாடி, பதக்கங்களைப் பெற்று, இந்தியாவுக்குப் பெருமைகளைக் குவித்துள்ளனர். இவர்களில் பலரது முயற்சிகளுக்குத் துணையாக நின்று, அவர்களின் விளையாட்டுத் திறன் மேம்பாட்டுக்கான உதவிகளைச் செய்து, வெற்றி இலக்கிற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 5 ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்ற திராவிட மாடல் அரசு.

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் சேத்திரபாலபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பரணிகா இளங்கோவன். ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கோல் ஊன்றித் தாண்டும் (Pole Vault) போட்டியில் 4.15 மீட்டர் உயரத்தைத் தாண்டி வெண்கலப் பதக்கம் பெற்றார். கிராமப்புறத்தில் எளிய குடும்பப் பின்னணியில் வளர்ந்த பரணிகா தனது பதக்கத்தால் அனைவரையும் அண்ணாந்து பார்க்க வைத்துள்ளார். 2026 மார்ச் மாதமே அவர் தேசிய அளவில் 4.22 மீட்டர் தாண்டி சாதனைப் படைத்திருந்தார். மே மாதம் 4.23 மீட்டர் உயரம் தாண்டி மீண்டும் சாதனை படைத்தார்.

பரணிகா இளங்கோவன் தேசிய அளவில் 4.22 மீட்டர் தாண்டி சாதனை படைத்தபோது, திராவிட மாடல் அரசின் முதலமைச்சரைத் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்தார்.



தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதற்காகத் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த சிறப்புத் திட்டங்க ளால் பயன் பெற்று, தன் திறனை வெளிப்படுத்தியவர் பரணிகா. முதலமைச்சருடனான சந்திப்பின் போது, தட களை வீரர்களுக்கான சர்வதேசத் தரத்திலான பயிற்சிக் கட்டணங்களுக்குரிய காசோலைகளையும் வழங்கி சிறப்பித்தார் முதலமைச்சர்.

தும் எல்லாவற்றையும் மேம்படுத்தியதுடன், புதிய திட்டங்களையும் கொண்டு வந்தார் என்பதையும், தேசிய அளவில் வெற்றிகரமாக பங்கெடுத்தப் போட்டிகளின் மூலமாக திராவிட மாடல் ஆட்சியில் 70 இலட்ச ரூபாய் வரை பரிசுத் தொகை கிடைத்ததையும் வித்யா ராம ராஜ் குறிப்பிட்டிருந்தார். விளையாட்டு வீரர்க

ஞுக்கான எலைட் ஸ்கீம் அடிப்படையில் ஆண்டுக்கு 30 இலட்ச ரூபாய் பயிற்சிக்காகக் கிடைப்பதால், தனக்குத் தேவையான விளையாட்டு உடைகள், காலணிகள் உள்ளிட்ட விளையாட்டுக் கருவிகளை வாங்கிக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தமிழ்நாட்டில் அனைத்து வகையான விளையாட்டுகளுக்கும், அதில் பங்கேற்பவர்களுக்கும் உரிய உதவிகளை செய்து ஊக்கப்படுத்தியது திராவிட மாடல் அரசு. மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட், சென்னையிலும் மதுரையிலும் சர்வதேச தரத்திலான ஹாக்கிப் போட்டிகள், சென்னைதிருச்சி மதுரைகோவை உள்ளிட்ட இடங்களில் தேசிய அளவிலான கேலோ விளையாட்டுப் போட்டிகள், மாவட்டங்கள் தோறும் தரமான விளையாட்டு மைதானங்கள், சட்டமன்றத் தொகுதிகள்தோறும்சிறுவிளையாட்டரங்கம், விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள் எனப் பல முன்னெடுப்புகள் திராவிட மாடல் ஆட்சியில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இந்திய அளவிலானப் போட்டிகளில் விளையாடினாலும், சர்வதேச அளவில் விளையாடினாலும் அவர்களுக்கான பயிற்சித் தொகையையும், பதக்கங்கள் வென்ற



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

பிறகு பரிசுத் தொகையையும் அள்ளி வழங்கியது திராவிட மாடல் அரசு. கிராமப்புறத்திலிருந்து விளையாட்டுத் துறைக்கு வரும் வீரர்கள், ஏழ்மையானக் குடும்பத்திலிருந்து வருபவர்கள் உள்பட அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்கிடும் வகையில் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைத் திறம்பட செயல்படச் செய்தது திராவிட மாடல் அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நடைப்பெற்றதுதான் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி. 2006ஆம் ஆண்டு கத்தார் தலைநகர் தோஹாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சார்பில் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்றார் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை சாந்தி. மாநில அரசின் சார்பில் சாந்திக்கான பரிசுத் தொகையையும் அறிவித்தார் அப்போதைய முதலமைச்சர் கலைஞர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தடகளப் போட்டியில் பதக்கம் வெல்வது அதுவே முதல் முறை என்பதால் தமிழர்கள் பலரும் பெரும் கொண்டாட்ட மனநிலையில் இருந்தனர். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. பாலினப் பரிசோதனையில் சாந்திக்கு ஆண்ட்ரோஜென் அதிகளவில் இருப்பது கண்டறியப்பட்டதால், அவர் ஆண்தன்மை கொண்டவர் என்றும், பெண்களுக்கானப் போட்டியில் வென்ற வெள்ளிப் பதக்கம் செல்லாது என்றும் ஆசிய விளையாட்டுப் போட்டி அறிவித்து, அவருக்கானப் பதக்கத்தைப் பறித்தது.

பாலினப் பரிசோதனையின் காரணமாகப் பதக்கம் பறிக்கப்பட்ட சாந்தி சோகத்துடன் தாய்நாடு திரும்பினார். முதலமைச்சர் கலைஞர் அவரைத் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துப் பாராட்டினார். "ஓடியது இந்தக் கால்கள்தானே" என்று சொல்லி, மாநில அரசு அறிவித்த பரிசுத் தொகையையும் சாந்திக்கு வழங்கி, அவரை ஊக்கப்படுத்தும் வகையில் தடகளப் பயிற்று நராகச் செயல்படச் செய்தார். திராவிட மாடல் ஆட்சியில் திருவாரூர் மாவட்ட அளவில் தடகளப் பயிற்றுநராக சாந்தி பல வீரர்வீராங்கனை களை உருவாக்கினார்.

எவர் ஒருவருக்குமான வாய்ப்பைப் பறிக்கக்கூடாது என்பதும், அவரவருக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதும் தான் சமூக நீதி. விளையாட்டுத் துறையிலும் அந்த சமூக நீதியை நிலைநாட்டியது திராவிட மாடல் அரசு. இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவர்கள், பதக்கங்கள் பெற்றவர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3% இடஒதுக்கீடு அடிப்படையில் வேலை வாய்ப்பினை வழங்கி அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான உத்தரவாதமும் திராவிட மாடல் அரசால் வழங்கப்பட்டது.


தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிப்காட், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகம் உள்ளிட்ட நிறு வனங்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இளம் வயதிலேயே விளையாட்டுத் திறனை மேம்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளையும் ஆண்டுதோறும் நடத்தியது திராவிட மாடல் அரசு. பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுப்பிரிவினர், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு,



அதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலானப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்று, பதக்கம் வென்றவர்களுக்கு திராவிட மாடல் முதலமைச்சரே நேரில் அவற்றை வழங்கிப் பாராட்டினார்.

திராவிட மாடல் அரசு சிறப்பாக நடத்திய முதலமைச்சர் கோப்பையினால் தமிழ்நாட்டில் ஓர் இளம் தலைமுறை விளையாட்டுப் போட்டிகளில் நம்பிக்கையுடன் பங்கேற்றது. கபடி போட்டியில் புகழ்ப்பெற்று, இந்திய ஜூனியர் பெண்கள் அணியில் இடம்பெற்றுள்ள கண்ணகி நகர் கார்த்திகா உள்ளிட்ட வீராங்கனைகளும் வீரர்களும் முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் பங்கேற்று சாதனை படைத்தவர்களாவர்.



தமிழ்நாடு அளவிற்கு விளையாட்டுத் துறையைக் கடந்த ஐந்தாண்டுகளில் ஊக்கப்படுத்திய மாநிலங்களைத் தேடிக் கண்டுப் பிடிக்க வேண்டும் என்கிற அளவிலும், தமிழ் நாடு அரசு போல எங்களுக்கும் வசதிகள் செய்து கொடுங்கள் என்று பிற மாநில விளையாட்டு வீரர்கள் சொல்லக்கூடிய அளவிலும் விளையாட்டுக் களத்தில் திராவிட மாடல் அரசு விதைத்தவை இன்று விளைந்து நிற்கின்றன.

முந்தைய திராவிட மாடல் ஆட்சியில், சென்னை அருகே செம்மஞ்சேரியில் 125 ஏக்கர் ஆக்கிரமிப்பு நிலத்தைக் கையகப்படுத்தி, 206 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்திலான விளையாட்டு நகரத்தை (Global Sports City) உருவாக்குவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. த.வெ.க அரசு அதனை ரத்து செய்து, ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியால் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் விளைந்த பெருமைகளை அறுவடை செய்து விட்டு, விளை நிலத்தை வீணடிக்கும் வேலையைச் செய்கிறது விஜய் அரசு.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என்ராஜேஷ்குமார், முன்னாள் அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி, வெள்ளக்கோயில் நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்ளிட நாமக்கல் மாவட்ட கழக நிர்வாகிகள், மூலனூர் பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், தூரம்பாடி ஊராட்சி மற்றும் கருப்பன்வலசு ஊராட்சி பகுதியில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் நல்லசிவம், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்பி, ஒன்றிய கழகச் செயலாளர் ப.பழனிசாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.